பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன்

மலர்: 19] சென்னை: புரட்டாசி 22 (8—10—71) வெள்ளி வெளியூர்: புரட்டாசி 23 (9—10—71) சனி [இதழ்: 96

வீடில்லாதவர்கட்கு நிலம் ஒதுக்கீடு

மத்திய அமைச்சர் அறிவிப்பு

பெங்களூர், அக். 8—

"கிராமப் பகுதிகளில் வீடில்லாதவர்கட்கு நிலம் ஒதுக்க, மாநிலங்களுக்கு முழுத் தொகையும் மானியமாக அளிக்கும் திட்டம் ஒன்றை மத்திய அரசு வகுத்திருக்கிறது" என்று மத்திய வீட்டு வசதித் துறை அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் தெரிவித்திருக்கிருர்.

ஏழைகள் சிரிக்கும்வரை ஓயோம்

அண்ணு இலட்சியத்தை நிறைவேற்றியே தீருவோம்

கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி சூளுரை

சென்னை, அக். 8—

"'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்பது வெற்று முழக்கமல்ல — வார்த்தை ஜாலமல்ல; இழிநிலையில் கிடந்தோர் எழுந்து நின்று பூரிக்கும் இனிப்புச் செய்தி — எங்கள் அண்ணன் தந்த செய்தி; ஆகவே, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' எனும் இலட்சியத்திற்காக, எங்களது உடலில் ஒரு சொட்டு இரத்தம் இருக்கும் வரையில் உழைப்போம்!

"'ஏழையின் வாழ்வில் இன்னல் தொலைந்தது — அவன் புன்னகை பூத்தான்' என்ற நிம்மதி ஏற்படுகின்ற வரையில் எங்கள் பயணத்தைத் தொடர்ந்து நடத்துவோம்!

"இந்த இலட்சியம், நாங்கள் ஆட்சிப்பீடம் ஏறிவிட்ட பிறகு வந்ததல்ல! எதிர்க் கட்சியாக இருந்தபோதே ஏற்பட்டதாகும்; குடிசைப் பகுதிகளில் தீ என்ருல் எங்கள் அடிவயிற்றில் தீ மூளும் — ஓடோடி வந்து உதவுவோம்! குடிசைப் பகுதியில் வெள்ளம் என்ருல் எங்கள் கண்களில் கண்ணீர் வெள்ளம் புரளும்!

"இப்படி ஏழை மக்களுக்காக உதவும் எங்களது நீண்ட பயணத்தில் கிடைத்த ஒரு வாய்ப்புத்தான் இந்த ஆட்சிப் பொறுப்பு!

"இந்த வாய்ப்பையும் உங்களுக்காகவே பயன்படுத்துவோம் — உங்களுக்காகவே வாழ்வோம் — உங்களுக்காகவே ஆளுவோம் — உங்களுக்காகவே பாடுபடுவோம்"

என்று முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள், நேற்று சேத்துப்பட்டு மீனும்பாள் சிவராஜ் நகர் குடிசை மாற்றுத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் கூறினர்.

மேயர் சா. கணேசன் தலைமையிலும் — முரசொலி மாறன் எம்.பி. முன்னிலையிலும் நடைபெற்ற இவ்விழாவில் குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு. இராம. அரங்கண்ணல் வரவேற்புரையாற்றினர்.

தலைமைப் பொறியர் கே. ஆர். இராமசாமி அறிக்கை படித்தார்.

அமெரிக்கத் தூதுவரக அதிகாரி திரு. பார்க்கர், திருமதி கிளப்வாலா ஜாதவ் எம்.எல்.சி. ஆகியோரும், சட்டமன்ற — நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

அடிக்கல் நாட்டி, கலைஞர் மேலும் மேஜைகையில் குறிப்பிட்டதாவது:—

"குடிசைகள் மாடிக் கட்டடங்களாகிக் கொண்டிருக்கும் இந்த வேளையில், சென்னையில் மேலும் குடிசைகள் பெருகுவதைத் தடுக்கவேண்டும் — கிராமப்புறங்களிலிருந்து மக்கள் நகர்ப்புறம் நோக்கி வருவது தடுக்கப்பட வேண்டும்.

'நகரத்திற்கு வந்தால் தான் பிழைப்புக் கிடைக்கும் — கவுரவமான வாழ்க்கை கிடைக்கும்' என்ற நிலையை நாம் மாற்றியே ஆக வேண்டும.

'கிராமத்திலும் வேலை வாய்ப்பு உண்டு — கவுரவமான வாழ்க்கை உண்டு — எல்லாவிதமான நல்ல நாகரிக வசதிகள் உண்டு' எனும் நிலையை உருவாக்க நாம் பாடுபடவேண்டும்.

நகரத்திற்குள் கிராமப் பகுதி மக்கள் வராமல் தடுப்பதைவிட, இந்தப் பணி முக்கியமானது.

இதற்கிடையில் நாம், குடிசை மாற்று வாரியத்தின்மூலம் ஆற்றும் பணி நிறைவுபெற நகரம் நோக்கிவரும் மக்களை நகரின் வெளிப்புறங்களில் குடியிருப்புக்களை ஏற்படுத்தி — அவர்களுக்கு வசதி செய்யவேண்டும்; இத்தகையப் பணியின் மூலம்தான் குடிசைகளே இல்லாத சென்னை நகரை உருவாக்கிட முடியும்.

இந்தப் பணிக்கு ஆங்காங்கு இருக்கின்ற குடிசைப் பகுதி மக்கள் ஒத்துழைக்க வேண்டும்; அப்படி ஒத்துழைப்பதன் மூலம் தான் இந்த நற்பணிகள் வெகு வேகமாக நிறைவு பெறும்.

குடிசை மாற்று வாரியத்தின் நோக்கமே, 'எங்கெந்தப் பகுதியில் குடிசை மக்கள் வாழ்கிருர்களோ அந்தந்தப் பகுதியில் மாடிக் கட்டடம் கட்டிக் குடியேற்றுவது' என்பதுதான்; அந்தப் பகுதிகளிலிருந்து மக்களை விரட்டுவதல்ல நமது நோக்கம்!

கடற்கரைப் பகுதியிலே இருந்த மீனவர்களுக்கு அதே பகுதியில் தான் குடியிருப்புக்களை அமைத்துத் தந்திருக்கிறேம்.

'ஏழையின் சிரிப்பில் இறைவன் இருக்கிருன்' என்று நமது அண்ணன் கூறினர்; அவரது வழியில் நாம் பாடுபட்டு வருகிறேம்; ஆனல் சிலருக்கு அது ஏளனமாகத் தெரிகிறது — கேலியாகத் தெரிகிறது; யாருக்கு — மாட மாளிகைகளில், கூடகோபுரங்களில் வாழ்வோருக்கு! அவர்களுடைய நலன்களைக் காப்போருக்கு!

ஏழையின் கண்ணீரைக் கண்டு அலட்சியப்படுத்துவோருக்கு அது கேலியாகத் தெரியலாம்! 'அடிமைகளாய் — தொழும்பர்களாய் — பொட்டுப் பூச்சிகளாய் — புன்மைத் தேரைகளாய் நடத்தப்பட்ட ஏழைகள் எங்கே இந்த ஆட்சியால் ஏற்றம் பெற்று விடுவார்களோ' என்ற எரிச்சல் கொண்ட எழடுக்கு மாளிகைக்காரர்களுக்கு இது கேலியாய்த் தெரியலாம்!

எழடுக்கு மாளிகையில் அந்தச் சீமான்கள் மட்டும் வாழ்வதில்லை; குடிசை மக்களும் இப்போது குடிசை மாற்று வாரியம் அமைத்துத் தந்த எழடுக்கு மாளிகையில் வாழ்கிருர்கள்!

'நீ தன்னந் தனியாக எழடுக்கு மாளிகையில் வாழ்கிருய்; ஆனல் நாங்களோ, 200 குடும்பங்களாக எழடுக்கு மாளிகையில் வாழ்கிறேம்; அந்த எழடுக்கிற்கும் — இந்த எழடுக்கிற்கும் போராட்டம் வந்தால், எந்த எழடுக்கு மாளிகை வெல்லும் என்பதை எண்ணிப் பார்' என்று ஏழை மக்கள் சமுதாயம், அந்த எழடுக்கு மாளிகை வாசிகளைக் கேட்கத் துவங்கிவிட்டது!"

காஷ்மீரைக் கைப்பற்ற பாகிஸ்தான் முயற்சி

ஒரே நேரத்தில் இரு முனைகளில் தாக்குதல் நடத்தத் திட்டம்

வங்க தேசத்தை இழப்பது உறுதி

புதுடில்லி, அக். 8—

டெல்லியிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்திலிருந்து விலகி — தமது விசுவாசத்தை வங்க தேசத்துக்கு அளித்து வரும் முதிர்ந்த அதிகாரியான உமாயூன் ரஷீத் சௌத்ரி, 'வங்க தேசத்தை இழக்க வேண்டிய நிலையிலுள்ள மேற்குப் பாகிஸ்தான், காஷ்மீரைக் கைப்பற்ற முயற்சிக்கக் கூடும்' என்று கருத்தறிவித்தார்.

அனைத்திந்திய வானெலியின் டெலிவிஷன் பிரிவு, பாதுகாப்பு ஆராய்ச்சித் துறை இயக்குநர் கே. சுப்பிரமணியத்தையும், இவரையும் பேட்டி கண்டபோது, உமாயூன் சௌத்ரி இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

சௌத்ரியின் கருத்தை ஆதரித்த சுப்பிரமணியம், பாகிஸ்தான், இராஜஸ்தானிலும் — காஷ்மீரிலும் ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்தக்கூடும் என்று கூறினர்.

"பாகிஸ்தான் இராணுவத்தை விட, இந்திய இராணுவம் பலம் வாய்ந்ததாக இருக்கிறது" என்றும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் இராணுவத்தில் 3,65,000 பேர்களே இருக்கின்றனர்; ஆனல் இந்திய இராணுவத்தில் 8,00,000 பேர் இருக்கின்றனர்; பாகிஸ்தான் விமானப் படையில் 280 போர் விமானங்களே உள்ளன; இந்தியாவிடம் 600 விமானங்கள் உள்ளன" என்றும் அவர் தெரிவித்தார்.

நிலச் சரிவில் கிராமமே அழிந்தது

250 பேர்களின் கதி?

தைப்பே, அக். 8—

தேசியச் சீன தைவானின் கிழக்குக் கரையில் — 'இலான்' எனும் இடத்திற்கு அருகில் திடீரென்று ஏற்பட்ட நிலச் சரிவில், ஒரு கிராமம் முழுவதும் பாறைகளிலும் — சேற்றிலும் புதைந்துவிட்டது; அங்கு சுமார் 250 பேர் குடியிருந்துவந்தனர்; அவர்களின் கதி என்ன ஆயிற்று என்று தெரியவில்லை; அனைவரும் மாண்டுவிட்டிருக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

சிம்சன் குரூப் தொழிலாளர்கட்கு ரூ. 54 இலட்சம் போனசு

சென்னை, அக். 8—

சிம்சன் குரூப் நிறுவனங்களின் நிர்வாகத்தினருக்கும் — தொழிற் சங்கத்துக்குமிடையில் போனஸ் உடன்பாடு ஏற்பட்டுவிட்டது.

இந்த உடன்பாட்டின்படி, அக்டோபர் 11-ந் தேதியன்று சுமார் 15,000 தொழிலாளர்களுக்கும் — எழுத்தர்களுக்கும் மொத்தம் ரூ. 54 இலட்சம் போனசு வழங்கப்படும்.

குறைந்த அளவு போனசு

மத்திய அரசின் புதிய திட்டம்

தொழில் அமைச்சர் ஆர்.கே. காடில்கர் விளக்கம்

பம்பாய், அக். 8—

'குறைந்தபட்ச போனசு வழங்குவது குறித்து, மத்திய அரசு புதிய திட்டம் ஒன்றை அறிவித்திருக்கிறது; இதன்படி, எல்லா நிறுவனங்களும் 5 சதவிகிதம் குறைந்த அளவு போனசு தரவேண்டும்.

"அரசின் இந்த முடிவு சட்டமாக்கப்படவில்லையாயினும், அனைவரும் இத்திட்டத்தினைக் கடைபிடிப்பர் என நம்புகிறேன்"

என்று, மத்திய அரசின் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஆர். கே. காடில்கர் தெரிவித்தார்.

போனசுப் பிரச்சினை குறித்து நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் முடிவு ஏதும் ஏற்படாததினலேயே அரசு புதிய முடிவை அறிவித்திருக்கிறது.

"தொழிலாளர் பிரதிநிதிகள் கோரும் 8.1/3 சதவிகித குறைந்தபட்ச போனசுக் கோரிக்கை நியாயமற்றதாகும்" என்று அமைச்சர் கருத்துத் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"புதிய முறையின்படி, அந்தந்த நிறுவனங்களின் பொருளாதார நிலைமைக்கேற்பக் குறைந்தபட்ச போனசை உயர்த்த வகை செய்யப்பட்டிருக்கிறது; புதிய முறைப்படி, இந்த மாதம் 12-ம் நாளுக்குள் போனசு வழங்கப்படும் என நம்புகிறேன்."

முத்துராமலிங்க தேவர் நினைவு அஞ்சல் தலை

தமிழக அரசு கோரிக்கை

சென்னை, அக். 8—

பார்வர்டு பிளாக் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ. ஆர். பெருமாள் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் நினைவாக, அவர் உருவம் பொறித்த அஞ்சல் தலை வெளியிடப்பட வேண்டும் என்று தமிழக அரசு, மத்திய அரசுக்கு எழுதியுள்ளது.

ரூ.30 கோடி செலவில் 40,000 குடியிருப்புகள்

250 குடிசைப் பகுதிகள் அடியோடு மாற்றியமைக்கப்படும்

குடிசைவாழ் மக்களின் அல்லல் தீர நிரந்தரக் கட்டடங்கள் உருவாகின்றன

சென்னை, அக். 7—

அசோக் நகர் பகுதியில் -- 'கலைஞர் கருணாநிதி நகரில்' ரூ. 39 இலட்சம் செலவில் குடிசைவாழ் மக்களுக்கான 488 புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கான திட்டத்திற்கு முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

"இன்னும் 5 அல்லது 6 ஆண்டுக் காலத்தில் சென்னை நகரில் குடிசைகளே இல்லை என்ற நிலை ஏற்பட்டு, குடிசைகள் என்பது ஒரு காட்சிப் பொருளாக ஆகப்போகிறது" என்று முதல்வர் குறிப்பிட்டார்; குடிசைகள், சேரிகள் முதலியவைகள் ஒழிக்கப்பட்டு அதில் வாழும் அனைவருக்கும் நிரந்தரக் கல் வீடுகள் கட்டித்தர அரசாங்கம் எடுத்துவரும் பல்வேறு நடவடிக்கைகளை முதல்வர் விளக்கினார்; இப்பணிக்காக அமைக்கப்பட்ட குடிசைப் பகுதி மாற்றுவாரியம் ஆற்றிவரும் துரிதமான பணிகளுக்காகப் பாராட்டுத் தெரிவித்தார்.

"சென்னை நகரில் மொத்தம் 602 குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. இவைகளில் சுமார் 6 இலட்சம் மக்கள் வசிக்கின்றனர்; ரூ. 30 கோடி செலவில் சுமார் 40 000 குடியிருப்புகள் கட்டி மேற்படி 602 குடிசைப் பகுதிகளில் 250 குடிசைப் பகுதி மக்களை மாற்ற குடிசை மாற்று வாரியம் திட்டமிட்டுள்ளது.

"நடப்பு ஆண்டுத் திட்டத்திற்கு அரசாங்கம் ரூ. 4 கோடி ஒதுக்கியுள்ளது; 50 இடங்களில் சுமார் 8,000 குடியிருப்புகள் கட்ட வேலை நடந்துகொண்டிருக்கிறது.

"கட்டப்படுகின்ற புதிய குடியிருப்புகளில் பள்ளிக்கூடம் -- மருத்துவமனை உள்பட அனைத்துச் சுகாதார வசதிகளும் உள்ளவையாகச் செய்து தரப்படும்.

"இப்பொழுது அடிக்கல் நாட்டப்பட்ட இடத்தில் 488 குடியிருப்புகளும் இன்னும் 9 அல்லது 10 மாதங்களுக்குள் கட்டிமுடிக்கப்படும்; இந்த இடத்தில் அடையில்லா நகர் -- மல்லிப்பூ நகர் -- மற்றும் அருகிலுள்ள இன்னும் சில குடிசைப் பகுதி மக்களும் குடியேற்றப்படுவார்கள்.

"ஒவ்வொரு குடியிருப்புக்கும் நியாய வாடகை ரூ 43 ஆகிறது; ஆனால் ரூ. 15 மாத்திரமே மாத வாடகையாக வசூலிக்க அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது."

இந்த விவரங்களை குடிசை மாற்று வாரியம் தலைமைப் பொறியர் கே. ஆர். இராமசாமி தெரிவித்தார்.

விழாவுக்கு முன்னிலை வகித்த தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி மாறன் குடிசை மாற்று வாரியப் பணிகளைப் பாராட்டினார்.

விழாவிற்கு திரு. காஞ்சி மணிமொழியார் தலைமைவகித்தார்.

அனைவரையும் வரவேற்றுப் பேசிய குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைவர் திரு. இராம அரங்கண்ணல் எம்.எல்.ஏ. குடிசை மாற்று வாரியம் செய்துவரும் பணிகளையும் -- பாதுகாப்பும் அனைத்து வசதிகளும் கொண்ட நிரந்தரக் குடியிருப்புகள் கட்டும் அதன் பல்வேறு திட்டங்களையும் விளக்கினார்; மாதத் தவணையின் கீழ், அங்கு குடியிருக்கும் மக்களுக்காக இக்குடியிருப்புகளை சொந்தமாக்கி விடவும் வகை செய்யப்பட்டுள்ளதை அவர் தெரிவித்தார்.

புதுவை மாநிலத்தில் அமைச்சர் என்.வி.என்.

காரைக்கால், அக். 6—

தமிழ்நாடு தொழிலாளர் நல அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள், காரைக்கால் கொம்யூனில் தர்மபுரம், நெரவி கொம்யூனில் விழுதியூர் ஆகிய கிராமங்களில் இரண்டு சமுதாய மண்டபங்களையும், இரு பொது வானொலி மன்றங்களையும் திறந்து வைத்தார்.

அமைச்சர் பேசுகையில், 'மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும்' என்று கோரினார்.

பொருளாதார -- சமூகத்துறைகளில் பின்தங்கியவர்களுக்கு புதுவை தி. மு. க. அரசு செய்யும் பணிகளைப் பாராட்டினார்; 'புதுவைக்குத் தனியாக ஒரு திட்டக்குழு அவசியம்' என்றும் அவர் வலியுறுத்தினார்.

புதுவை உள்துறை அமைச்சர் திரு. எஸ் இராமசாமி தலைமை வகித்துப் பேசுகையில் 'மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்ற கோரிக்கையை புதுவை ஆதரிக்கிறது' என்று கூறினார்.

மாராட்டிரத்தின் 15 ஆண்டுத் திட்டம்

ரூ. 6000 கோடி தேவையாம்

நாகபுரி, அக். 7—

"15 ஆண்டு முன்னேற்ட மாவட்டத் திட்டங்களையும், மாநிலத் திட்டத்தையும் நிறைவேற்ற மாராட்டிரத்துக்கு ரூ. 5000 முதல் ரூ 6000 கோடி தேவைப்படும்"

என்று மாநில சட்டமன்றத்தில் முதலமைச்சர் வி. பி. நாயக் கூறினார்.

"1973—74-ல் அந்தத் திட்டம் நடைமுறைக்கு வரக்கூடும்" என்றார் அவர்.

மாவட்டத் திட்டங்களைத் தயாரிப்பதற்கு, முன்னேற்ட நடவடிக்கைகள் இப்பொழுது முடிவடைந்துள்ளன" என்றும் அவர் கூறினார்.

கடத்தல்காரரைப் பிடித்துக் கொடுக்கும் கருவி

சென்னை விமான நிலையத்தில் பொருத்தப்பட்டது

சென்னை, அக். 7—

விமானம் மூலம் தங்கம் கடத்தப்படுவதைத் தடுப்பதற்கு சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் புதிய ஏற்பாடு ஒன்று செய்யப்பட்டிருக்கிறது.

இதன்படி, விமான நிலையத்தில் நூதன கருவி ஒன்று அமைக்கப்பட்டது.

கடத்தல்காரர்கள் மறைத்து வைத்திருக்கும் தங்கத்தை இந்தக் கருவி கண்டுபிடிக்கும்.

இந்தப் புதிய கருவியின் விலை ரூ. 27,000 ஆகும்.

இது போன்ற கருவிகள் ஏற்கனவே இந்தியாவின் மற்ற முக்கிய நகர விமான நிலையங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

26 ஆலைகளில் 'லே--ஆப்'

வேலை நிறுத்தம் செய்து வருவதன் விளைவு

கோவை, அக் 8—

கோவையிலுள்ள 50 நூற்பாலைகளில் கடந்த மூன்று நாட்களாக, ஒரு பிரிவு தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்துவருவதால் பல ஆலைகளும் 'லே—ஆப்' அறிவித்திருக்கின்றன.

ஏற்கனவே 18 ஆலைகள், 'லே--ஆப்' அறிவித்திருந்தன.

நேற்று மேலும் 8 ஆலைகள் லே--ஆப்' அறிவித்திருந்தன.

நேற்று மேலும் 8 ஆலைகள் 'லே--ஆப்' அறிவித்திருப்பதுடன், மொத்தம் 26 ஆலைகள் 'லே--ஆப்' அறிவித்துள்ளன,

தி. மு. க. இந்திய தேசியக் காங்கிரசு போன்ற பெரிய தொழிற்சங்கங்கள் இந்த வேலை நிறுத்தத்தை ஆதரிக்கவில்லை; ஆனால், ஒரு பகுதியினர் மட்டுமே உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர்.

வேலை நிறுத்தம் செய்வோர் குறைந்தபட்ச போனசு 8 1/3 சதவிகிதமாக உயர்த்தவேண்டுமென்று கோருகின்றனர்.

பாங்கி ஊழியருக்கு கடும் அபராதம்

ரூ. 25.73 இலட்சம் மோசடி

அகமதாபாத், அக். 8—

மோசடி செய்த குற்றத்துக்காக பாங்கி குமாஸ்தா ஒருவருக்கு நீதிமன்றம், 7 ஆண்டு கடுஞ் சிறைத் தண்டனையும், ரூ. 5 இலட்சம் அபராதமும் -- கட்டத் தவறினால் மேலும் 2 ஆண்டு சிறைத் தண்டனையும் அளித்துத் தீர்ப்பு கூறியிருக்கிறது.

தாம் பணி புரியும் பாங்கியில் போலிக் கணக்குகளைத் தயாரித்து, இவர் ரூ. 25.73 இலட்சம் அளவுக்கு மோசடி செய்திருக்கிறாராம்.

வங்க அகதிகட்கு அந்நிய உதவி

வாக்களித்தபடி வந்து சேரவில்லை

புதுடில்லி, அக். 7—

வங்காள தேச அகதிகளுக்காக 15 37 கோடி டாலர் தர அந்நிய அரசுகளும் -- அதிகாரபூர்வமற்ற நிறுவனங்களும் உறுதி கூறிய போதிலும் செப்டம்பர் 22-ம் நாள் வரை அதில் 2.08 கோடி டாலர் மதிப்புக்குத்தான் இந்தியாவுக்கு உதவி கிடைத்திருக்கிறது

1.05 கோடி டாலர் ரொக்கமும், 99 இலட்சம் டாலர் மதிப்புள்ள பொருட்களும் கிடைத்துள்ளதாக அதிகாரபூர்வமான புள்ளி விவரங்கள் தெரிவித்தன.

6 மாத காலத்துக்கு 80 இலட்சம் அகதிகளுக்குத் தேவைப்படும் உதவி 5.30 கோடி டாலர்களாகும்.

அகதிகள் 80 இலட்சம் பேராக இருந்தபோது இவ்வாறு மதிப்பிடப்பட்டது; ஆனால் இப்பொழுது அகதிகள் எண்ணிக்கை 90 இலட்சத்தைக் கடந்துவிட்டது.

ஆஸ்திரேலியா உதவி

இதற்கிடையில், கிழக்கு வங்க அகதிகளுக்கு உதவ இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் ஆஸ்திரேலியா மேலும் 15 இலட்சம் டாலர் தரும் என அறிவிக்கப்பட்டது; '5 இலட்சம் டாலர் மதிப்புள்ள அரிசி இந்தியாவுக்கும், அதே அளவு அரிசி பாகிஸ்தானுக்கும் அனுப்பப்படும்' என்று சட்டமன்றத்தில் அமைச்சர் தெரிவித்தார்.

கோடிக்கரையில் மான்கள் பூங்கா

ஆனைமலை-சுற்றுலா இடமாகும்

சென்னை, அக். 7—

தஞ்சை மாவட்டம் கோடிக்கரை காட்டுப் பகுதியில் மான் பூங்கா --பறவைகளுக்கான பூங்கா ஆகியவற்றை அமைப்பது குறித்துத் தமிழக அரசு ஆலோசனை செய்து வருகிறது.

ஆனைமலை, கொடைக்கானல் ஆகிய பகுதிகளை உல்லாசப் பயணிகளுக்கு ஏற்ற சுற்றுலா இடங்களாக மேம்பாடு செய்வது பற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

இந்தத் தகவல்களை, சென்னை-- எழும்பூரிலுள்ள அரும்பொருட் காட்சிசாலையில் வனவிலங்குகள் படக் கண்காட்சியைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் அமைச்சர் க. இராசாராம் தெரிவித்தார்.

குடியரசுத் தலைவர் வழங்கிய விருதுகள்

புதுடில்லி, அக். 6—

குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள், பல்வேறு துறைகளில் சிறந்த சாதனைகளைப் புரிந்த 123 பேருக்கு தேசிய விருதுகளை வழங்கினார்.

இசைவாளர்கள், மருத்துவர்கள் எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், தொழிலதிபர்கள், திரைப்பட நட்சத்திரங்கள், அறிஞர்கள், சமூக ஊழியர்கள் ஆகியோர் சிறப்பிக்கப்பட்டனர்.

3 'பத்ம விபூஷன்' விருதுகளும், 34 'பத்ம பூஷன' விருதுகளும், 74 'பத்மஸ்ரீ' விருதுகளும், 12 கௌரவ சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

உணவு உற்பத்தி-தமிழகம் பெற்றுள்ள வெற்றி

உரங்களைப் பயன்படுத்துவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டியதே காரணம்

உர விளம்பர இசைத்தட்டு வெளியீட்டு விழாவில் அமைச்சர் ப. உ. சண்முகம் விளக்கம்

சென்னை, அக். 8—

உரம் பற்றிப் பிரசாரம் செய்வதற்காக 'பாக்ட்' நிறுவனத்தினர் தயாரித்துள்ள இசைத் தட்டு ஒன்றை உணவு -- வேளாண்மை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள், ஒரு விழாவில் வெளியிட்டார்

அமைச்சர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:—

"உணவு உற்பத்தியில் தன்னிறைவு நிலைமையைத் தமிழகம் எட்டிவிட்டது; உரங்களைப் பயன்படுத்துவதில் தமிழ்நாட்டு விவசாயிகள் கைதேர்ந்தவர்களாகி விட்டிருப்பதே இந்த உணவு உற்பத்திப் பெருக்கத்துக்குக் காரணமாகும்.

"உரங்கள் விவசாயிகள் கைக்குப் போய்ச் சேரும்படியும், அதே நேரத்தில் அது நல்லபடி பயன்படுத்தப்படுமாறும் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்."

தமிழ்நாட்டில் மேலும் மதுத் தொழிற்சாலைகள்

சென்னை, அக். 7—

தமிழ்நாட்டில் புதிதாக ஆறு சாராயத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படும்; இதற்காக அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இவற்றில் மூன்று பீர் உற்பத்தித் தொழிற்சாலை ஆகும்; மீதமுள்ள மூன்றும் ஒயின்—விஸ்கி—பிராந்தி போன்ற மதுபான வகைகளை உற்பத்தி செய்யும்.

தமிழகத்தில் உள்ள இரு சர்க்கரை ஆலை நிறுவனங்களுக்குச் சாராய உற்பத்தி செய்யும் தொழிற்சாலை துவங்க முன்னனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

பத்து மாநிலங்களிலும் ஒரே நேரத்தில் தேர்தல்

தலைமைத் தேர்தல் அதிகாரியின் உறுதியான முடிவு

அலகாபாத், அக். 7—

"அடுத்த ஆண்டில் 10 மாநிலங்களின் சட்டமன்றங்களுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தப்படும்"

என்று தலைமைத் தேர்தல் கமிஷனர் சென் வர்மா தெரிவித்தார்.

"சட்டமன்றத் தேர்தல்களை பல கட்டங்களில் நடத்தும் யோசனையை முற்றிலும் எதிர்க்கிறேன்."

மாராட்டிரம், குசராத், இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், பஞ்சாப், காஷ்மீர், மைசூர், ஆந்திரம், இமாசலப் பிரதேசம் ஆகிய சட்டமன்றங்களுக்கு அடுத்த ஆண்டில் தேர்தல் நடக்கும்.

"இன்னும் காலம் இருப்பதால் சட்டமன்றத் தேர்தல்களுக்கு இன்னும் தேதிகள் முடிவு செய்யப்படவில்லை" என்று அவர் சொன்னார்.

"ஆனால், முன்னதாக ஒரு மாநிலத்தில் நடந்த தேர்தல் மற்றவற்றின் தேர்தலைப் பாதிக்குமாதலால், 10 மாநிலங்களிலும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதை அரசியல் கட்சிகளே விரும்பமாட்டா" என்றும் அவர் சொன்னார்.

உதகையில் முதல்தர ஓட்டல்

அமைச்சர் க. இராசாராம் தரும் தகவல்

உதகை, அக். 6—

உல்லாசப் பயணிகளுக்காக உதகையில் முதல்தர ஓட்டல் ஒன்றை ஐதராபாத் நிஜாம் துவக்குவார் என்று தெரிகிறது.

நீலகிரியில் சுற்றுலா வளர்ச்சி குறித்து நடந்த கருத்தரங்கில் இத்தகவலைத் தமிழ்நாடு சுற்றுலாத் துறை அமைச்சர் க. இராசாராம் தெரிவித்தார்.

"மாணவர்களுக்காகவும், நடுத்தர வகுப்புப் பயணிகளுக்காகவும் பெரிய விடுதி ஒன்றும் கட்டப்படும்" என்றும் அவர் கூறினார்.

அண்மையில் உலக பாங்கிக் குழு ஒன்று தமிழ்நாட்டில் மாமல்லபுரத்திற்கும், கேரளத்தில் கோவளப் கடற்கரைக்கும் வந்ததாகவும், உலக பாங்கியின் உதவியுடன் சுமார் ரூ. 7 கோடி செலவில் இவ்விரு இடங்களையும் சுற்றுலா இடங்களாக மேம்பாடு செய்யலாம் என்று குழு கருத்துத் தெரிவித்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சென்னை, பெங்களூர், திருவனந்தபுரம், ஐதராபாத் ஆகியவற்றை இணைத்துச் சுற்றுலாவை வளர்ச்சியடையச் செய்வதற்காகத் தீவிரத் திட்டம் ஒன்றை மாநிலச் சுற்றுலா மேம்பாட்டுக் கார்ப்ரேஷன் தயாரித்து வருவதாகவும் அவர் கூறினார்.

ஆளுநர் கே. கே. ஷா

கருத்தரங்கை ஆளுநர் கே. கே. ஷா துவக்கிவைத்துப் பேசுகையில், 'சாதாரண மக்களைக் கவரும் பொருட்டுச் சுற்றுலா இடங்களில் கூடுதல் வசதிகளுக்கும் தங்கும் விடுதிகளுக்கும் வகை செய்ய வேண்டும்' என்று கூறினார்; 'நீலகிரியில் கம்பி இரயில் பாதை வசதி சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவரும்' என்றார்.

அந்நியச் செலாவணி நெருக்கடியின் விளைவு

'ஹஜ்' பயணிகள் எண்ணிக்கை பாகிஸ்தான் குறைத்துவிட்டது

புதுடில்லி, அக். 8—

'ஹஜ்' பயணிகள் எண்ணிக்கையை மேற்குப் பாகிஸ்தான் இராணுவ அரசு குறைத்துவிட்டிருக்கிறது.

அந்நியச் செலாவணி நெருக்கடியே இதற்குக் காரணமாகும்.

சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில், 'ஹஜ்' பயணத்திற்கு அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை, 450 பேர் குறைவாகும்.

25 கம்பெனிகள் மூடப்பட்டன

புதுடில்லி, அக். 7—

இவ்வாண்டு சூலை மாதத்தில் நாட்டின் பல்வேறு மாநிலங்களிலும் -- மத்திய ஆட்சிப் பகுதிகளிலும் உள்ள 25 கம்பெனிகள் உற்பத்தியை நிறுத்திவிட்டன; கம்பெனிகள் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட இந்தக் கம்பெனிகளின் செலுத்தப்பட்ட மூலதனம் மொத்தம் ரூ. 56 இலட்சமாகும்.

இந்தக் கம்பெனிகள் அனைத்தும் பங்குகளால் வரையறுக்கப்பட்டவை; இவற்றுள் 17 கம்பெனிகள் கலைக்கப்பட்டுவிட்டன; மீதமுள்ள எட்டுக் கம்பெனிகள் 1956-ம் ஆண்டின் கம்பெனிச் சட்டப்படி பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டன.

கலைக்கப்பட்ட கம்பெனிகளின் செலுத்தப்பட்ட மூலதனம் மொத்தம் ரூ. 55 இலட்சம் ஆகும்.

கலைக்கப்பட்டுவிட்ட 17 கம்பெனிகளில் ஐந்து கம்பெனிகள் பொது லிமிடெட் கம்பெனிகளாகும்; மீதமுள்ள 12 தனியார் லிமிடெட் கம்பெனிகளாகும்.

மேற்கு வங்காளத்தில் 5 கம்பெனிகளும், கேரளத்தில் 3 கம்பெனிகளும், பீகார், மாராட்டிரம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் ஒவ்வொன்றிலும் இரண்டு கம்பெனிகளும், அசாம், உத்தரப் பிரதேசம், டில்லி ஆகியவற்றில் ஒவ்வொரு கம்பெனியும் கலைக்கப்பட்டன.

ஆகஸ்ட் மாதத்தில் மொத்தம் ஓர் இலட்சம் ரூபாயைச் செலுத்தப்பட்ட மூலதனமாகக்கொண்ட 8 தனியார் லிமிடெட் கம்பெனிகள் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டன.

அகதிகள் எண்ணிக்கை: ஓர் புள்ளிவிவரம்

கல்கத்தா, அக். 8—

"வங்க தேசத்திலிருந்து இந்தியாவுக்கு இதுவரையில் வந்து சேர்ந்துள்ள அகதிகளின் எண்ணிக்கை 90,91 000" என்று கடைசியாகக் கிடைத்த புள்ளிவிவரம் கூறுகிறது.

இவர்களில் 3,88 532 பேர் -- மேற்கு வங்கம், திரிபுரா, அசாம், பீகார், மத்தியப் பிரதேசம் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மத்திய அரசு அமைந்துள்ள முகாம்களில் தங்கியுள்ளனர்.

சுமார் 62,52,000 பேர் மேற்சொன்ன மாநிலங்களில் -- மாநில அரசுகளின் முகாம்களில் தங்கியுள்ளனர்; எஞ்சியுள்ள 24 50,000 பேர் முகாம்களுக்கு வெளியிலே தங்கியுள்ளனர்.

இந்த அகதிகளில் குழந்தைகள் 16 00,000 பேரும், பால் கொடுக்கும் தாய்மார்கள் 5,31,000 பேரும் உள்ளனர்.

மேற்கு வங்க மாநில அரசு 615 முகாம்களையும், திரிபுரா 273 முகாம்களையும், மேகாலயா 17 முகாம்களையும், அசாம் 27 முகாம்களையும் அமைந்துள்ளன.

முகாம்களில் உள்ளவர்களின் உடல்நலனைக் கவனித்துக் கொள்ள 800 டாக்டர்களும், 2,000 மருத்துவத் துறை ஊழியர்களும், 50 மருத்துவ மாணவர்களும் பணியாற்றிவருகின்றனர்.

பல்வேறு மாநிலங்களிலும் அகதிகளுக்காக 50 மருத்துவமனைகளும், 700 மருத்துவச் சிகிச்சைப் பிரிவுகளும் இருந்துவருகின்றன.

54,00,000 அகதிகளுக்குக் காலரா நோய்த் தடுப்பு ஊசியும், 40 00 000 பேருக்கு அம்மைத் தடுப்பு ஊசியும் குத்தப்பட்டுள்ளது.

44,231 பேர் குடல் சம்பந்தப்பட்ட நோயால் பீடிக்கப்பட்டதில் -- 5 574 பேர் இறந்தனர்; 22,00,000 வேறு வகை நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்; அவர்கட்குப் பல்வேறு முகாம்களிலும் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைகள் நடைபெற்றுவருகின்றன.

அகதிகட்கு உதவுவதற்காகப் பல்வேறு நாடுகளிலிருந்தும், அரிசி -- துணிமணிகள் -- குழந்தை உணவு -- கூடாரம் அமைப்பதற்கான சாமான்கள் -- மோட்டார் வண்டிகள் -- ஆம்புலன்சு கார்கள் ஆகியவை (சுமார் ரூ. 9 கோடி மதிப்புள்ளவை) வந்து சேர்ந்துள்ளன.

சோவியத் இரஷ்யா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி, ஐக்கிய அரபுக் குடியரசு, ஜப்பான், பிரான்சு, கானடா, சுவிட்சர்லாந்து, சுவீடன், பிரேசில், குவெய்த், வியட்நாம், அங்கேரி, சிங்கப்பூர் ஆகிய நாடுகளும், உலக சுகாதார அமைப்பும் (யூனிசெப்') உதவிகள் வழங்கியுள்ளன.

இரஷ்யாவுடன் பேச்சு நடத்தத் தயாராம்

சீனத் தலைமையமைச்சர் கூற்றும் -- விளக்கமும்

பீகிங், அக். 7—

"இரஷ்யாவுடனான எல்லைத் தகராறுகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த சீனா தயாராக இருக்கிறது"

என்று சீனத் தலைமையமைச்சர் சூ-யென்-லாய், இங்கு தம்மைச் சந்தித்த 60 பேர் கொண்ட அமெரிக்கக் குழுவினருக்கு அளித்த பேட்டியின்போது தெரிவித்தாராம்.

"சீன எல்லை நெடுகிலும், இரஷ்யா படைகளை வைத்திருப்பதை, சீனா கடுமையானதாகவே கருதி வருகிறது; ஆயினும் சீனாவின் அடிப்படைக் கொள்கை, பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க வேண்டும் என்பதேயாகும்" என்றும் சூ-யென்-லாய் குறிப்பிட்டார்.

"எங்களுடைய எல்லையில் 10 இலட்சம் துருப்புகள் நிறுத்தப்பட்டுள்ளன; இதுவன்றி, அணு ஆயுதங்களும், ஏவுகணைகளும் வைக்கப்பட்டுள்ளன" என்றும் அவர் தெரிவித்தார்.

"நாங்கள் ஒரு போருக்கு ஆயத்தப்படுத்திக் கொள்ளாமல், நாங்களாகவே பேச்சுவார்த்தைக்குப் போவது புத்திசாலித்தனமாகாது; ஏனெனில், வரலாறுகள், சீனாவுக்குப் பல முக்கியமான பாடங்களையும் கற்பித்திருக்கிறது" என்று அவர் குறிப்பிட்டார்.

விலைவாசி உயர்வு கட்டுமீறிவிடும்

ரிசர்வ்பாங்கியின் அபாய எச்சரிக்கை

பம்பாய், அக். 7—

"பொருளாதாரச் சூழ்நிலை இதே நிலையில் போய்க் கொண்டிருக்குமானால், விலைவாசி உயர்வு, நம்மால் கட்டுப்படுத்த இயலாத அளவுக்குச் சென்றுவிடும்; எனவே, விலைவாசியைக் கட்டுப்படுத்த உடனடியாகப் பயன் தரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்"

என்று, இங்கு நடைபெற்ற ரிசர்வ் பாங்கி இயக்குநர்கள் கூட்டத்தில் சுட்டிக்காட்டி எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது.

அதிகப் பற்று

பல மாநிலங்களும் பெரும் அளவில் அதிகப் பற்றுப் பெற்று வருவதையும் ரிசர்வ் பாங்கி கவலையுடன் எடுத்துக் காட்டியது.

1970-ம் ஆண்டு சூன் மாதத்தில், 6 மாநிலங்கள் ரூ. 126 கோடி அதிகப் பற்று வாங்கியிருந்தன; இந்த ஆண்டு சூன் மாதத்தில் 11 மாநிலங்கள் ரூ 371 29 கோடி அதிகப் பற்று வாங்கியிருப்பதாக அது தெரிவித்தது.

ஆடைகள் தயாரிப்புக்கு கத்தரிக்கோல் தேவையில்லை

லேசர் ஒளிக் கதிர் இனிப் பயன்படும்

அமெரிக்காவில் ஆடை தயாரிப்புத் தொழிலில் கத்தரிக்கோலுக்குப் பதிலாக 'லேசர்' ஒளிக் கதிர் வேலை செய்யத் தொடங்கியுள்ளது; பழைய முறைகளில் வெட்டுவதைக் காட்டிலும் லேசர் கதிர் பத்து மடங்கு வேகமாக வெட்டுகிறதாம்.

லேசர் கத்தரிக்கோல் எப்படி வேலை செய்கிறது? என்னென்ன ஆடைக்கு -- எப்படி எப்படி வெட்ட வேண்டுமென்ற விவரமெல்லாம் ஒரு கணிதப் பொறி (கம்ப்யூட்டர்) யில் குறித்து வைக்கப்படுகின்றன; இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது -- லேசர் ஒளிக் கதிர் உற்பத்திக் கருவி; 50 அடி நீளமும் 10 அடி அகலமும் உள்ள ஒரு மேடையின் நடுவே லேசரை வைக்கிறார்கள்; அதற்கு மேலாக ஒரு சுமை தூக்கி நகரும் பட்டை ஓடுகிறது.

சுருணையிலிருந்து ஒற்றையாகத் துணியை விரிக்கிறார்கள்; அது நகரும் பட்டைமீது நகர்ந்து வருகிறது; லேசர் கருவிக்கு மேலே அது வந்ததும், லேசர் தனக்குள்ள வெட்டும் அளவு விவரப்படி துணியை வெட்டிவிடுகிறது; உண்மையில் லேசர் ஒளிக் கதிரின் கொடிய சூடு, துணியை வெட்ட வேண்டிய இடத்தில் தீய்த்துப் பொசுக்கிவிடுகிறது; கைதேர்ந்த தொழிலாளி ஒருவர் விநாடிக்கு மூன்று அங்குலத் துணி வெட்டுவார்; லேசர், 30 அங்குலம் வெட்டுகிறது.

நொடிந்த நிலையில் ஐ. நா. நிறுவனம்

நியூயார்க், அக். 8—

"ஐ. நா. நிறுவனம், இப்போது ஏறக்குறைய நொடிந்துவிட்ட நிலைமையில் இருக்கிறது; ரொக்க வசதிகள் தீர்ந்து போய் விட்டன; இன்றியமையாச் செலவுகளுக்குக்கூட அன்றாடம் பணம் தேடவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது"

என்று ஐ நா. பொதுச்செயலாளர் ஊ -- தாண்ட், வரவு -- செலவுத் திட்டக் குழுவில் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார்.

8 கோடி பேருக்கு வீட்டு வசதியளிக்கும் திட்டம்

மாநில அரசுகட்கு முழுத் தொகையும் மானியமாகக் கிடைக்கும்

ஏழை -- நடுத்தர மக்களுக்கு வீடு கட்ட உதவும் புதிய திட்டங்கள்

சென்னை, அக். 8—

"கிராமங்களில், சுமார் 8 கோடி வீடற்ற ஏழைகளுக்கும், அரிசனங்களுக்கும் வீட்டு மனைகளை ஒதுக்குவதற்காக நிலங்களை கையகப்படுத்த மாநில அரசாங்கங்களுக்கு முழுத் தொகையை மானியமாக அளிப்பதென்று மத்திய வீட்டு வசதி அமைச்சகம் -- திட்ட அமைச்சகம், நிதி அமைச்சகம் ஆகியவை கொள்கையளவில் ஒப்புக்கொண்டிருக்கின்றன.

"நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் கிராமப் பகுதிகளில் இந்த வீட்டு மனைகளை ஏழைகளுக்கும், அரிசனங்களுக்கும் ஒதுக்குவது ஒரு பெரும் சமூகச் சீர்திருத்தமாக இருக்கும்"

என்று, மத்திய வீட்டு வசதித் துறை அமைச்சர் ஐ. கே. குஜ்ரால், சென்னையில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது :-

"வீட்டு வசதித் திட்டங்கள் தேக்கமடைந்துள்ளன; நகர்ப்புறப் பகுதிகளில் மட்டும் 1,20,00,000 வீடுகள் பற்றுக்குறையாக உள்ளன; ஆண்டுக்கு 10 இலட்சம் என்ற அளவில் இந்தப் பற்றுக்குறை அதிகரிக்கிறது.

வீட்டு வசதித் திட்டங்களினால் பயனடைய மக்களை -- வருவாயையொட்டி மூன்று பிரிவினராக அரசு பிரித்திருக்கிறது; ரூ. 350-வரையில் மாத வருமானம் உள்ளவர்கள் 'பலவீனமான பிரிவினர்' எனப்படுவார்கள்.

ரூ. 350-க்குமேல் ரூ. 600-வரையில் மாத வருமானம் உடையவர்கள், 'குறைந்த வருமானம் உள்ள பிரிவினர்' எனப்படுவார்கள்.

ரூ. 1,500-வரையில் மாத வருமானம் உடையவர்கள் 'நடுத்தர வருமானம் உள்ள பிரிவினர்' என்று கருதப்படுவார்கள்.

ஏற்கனவே சொந்தமாக வீடு உள்ள எவரும் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் வீடோ அல்லது குடியிருப்போ பெற முடியாது.

கொரட்டூர் திட்டம்

சென்னைக்கு அருகில் கொரட்டூர் பகுதியில் ரூ. 260 இலட்சம் செலவில் 150 ஏக்கர் பரப்பு நிலத்தில் 400 வீடுகளும், 1,200 வீட்டு மனைகளும் அமைக்கப்படும்; ஐந்து ஆண்டுக் காலத்தில் அவை முடிவடையும்.

நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கும் -- குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும், பலவீனமான பிரிவினருக்கும் வீடுகள் வடிவமைக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களுக்காக ஆயுள் காப்பீட்டுக் கழகம் மூலம் ரூ. 2.50 கோடியைத் தமிழ்நாட்டுக்கு மத்திய அரசு அனுமதித்திருக்கிறது.

இன்னும் சிறிது காலத்தில் வேலையிலிருந்து ஓய்வுபெறவிருக்கும் ஊழியர்களுக்காக ஒரு வீட்டு வசதித் திட்டத்தையும், குறைந்த வருமானமுள்ள பிரிவினருக்காக மற்றொரு வீட்டு வசதித் திட்டத்தையும் மத்திய அரசு வகுத்துவருகிறது.

இன்னும் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில் வேலையிலிருந்து ஓய்வுபெறவிருக்கும் ஓர் ஊழியர் ஓய்வு பெறும்போது வீட்டின் மொத்த மதிப்பில் 20 அல்லது 25 சதவிகிதம் தொகையைச் செலுத்துவாரானால், அவருக்கு வீடு தரப்படும்; வேலையிலிருந்து ஓய்வுபெறுவதையொட்டி அவர் பெறும் பணத்திலிருந்து மிச்சமுள்ள தொகை வசூலிக்கப்படும்.

குறைந்த வருமானமுள்ள பிரிவினர் தங்களது மாதாந்தர சிறு சேமிப்புகளை மாநில வீட்டு வசதி வாரியத்தில் போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்; இவ்வாறு போடப்படும் தொகைகள் வீட்டின் மொத்த மதிப்பில் 20 அல்லது 25 சதவிகிதம் தொகைக்குச் சமானமாக ஆகியதும் அவர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்படும்.

இந்த இரு திட்டங்களையும் தமிழ்நாடு அரசாங்கம் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டுள்ளது."

இராசபாளையம்--சிறந்த ஊராட்சி ஒன்றியம்

மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தைத் தொட்டுக் கொண்டு, திருநெல்வேலி -- இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு நடுநாயகமாக விளங்கும் இராசபாளையம் ஊராட்சி ஒன்றியம், இராமநாதபுர மாவட்டத்தில் சிறந்த ஒன்றியமாக 1969--70-ஆம் ஆண்டிற்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று — சுழற் கேடயம் பரிசாக அளிக்கப்பட்டுள்ளது.

இராசபாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் நெல் -- பருத்தி -- வாழை -- கரும்பு ஆகிய பயிர்கள் எப்போதும் பசுமையாகக் காட்சியளிப்பது இப்பகுதியின் மேம்பாட்டினைத் தெளிவாகப் புலப்படுத்தும்.

சென்ற ஆண்டில் அதிசய நெல் 'ஐ ஆர். 8' மட்டும் சுமார் 2,000 ஏக்கர்களில் பயிரிடப்பட்டு -- ஏக்கர் ஒன்றில் 60 மூட்டைகள்வரை சராசரியாக அறுவடை செய்யப்பட்டது.

இதே ஆண்டில் பெரும்பாலான வேளாண்மைக் குடும்பங்களுக்கு வேளாண்மைத் திட்டம் உருவாக்கப்பட்டு -- கலவை உரமும், பசுந்தாள் உரமும் பெருக ஆவன செய்யப்பட்டது. 760 கலவை உரக் குழிகளை வெட்டியதன் வாயிலாக உழவர்கள் கம்போஸ்ட் உரத் தயாரிப்பில் ஈடுபட்டுப் பயன்பெற்றனர்.

பயிர்ப் பாதுகாப்புக்கென 25 தெளிப்பான்களும், 2 தூவான்களும் வழங்கப்பட்டன.

இராசபாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் ஆறு கோழிப் பண்ணைகள் தொடங்கப்பட்டதுடன் 86 உயர் இனச் சேவல்களும் மலிவு விலையில் வழங்கப்பட்டுக் கோழி வளர்ப்பு வாயிலாகக் கூடுதல் வருவாய் கிடைக்க வகை செய்யப்பட்டது.

தவிர, சேத்தூர் என்னுமிடத்தில் ஒரு கால்நடை மருந்தகமும், இதர ஊர்ப்புறங்களில் ஐந்து மருத்துவ நிலையங்களும் தொடங்கப்பெற்று கால்நடைகள் சிறந்த முறையில் பேணப்படுகின்றன.

பள்ளி செல்லும் மாணவ--மாணவியரில் 41 சதவீதத்தினருக்கு நண்பகல் உணவு அளிக்கப்படுகிறது; ஒன்றியத்திலுள்ள தொடக்கப் பள்ளிகளில் 85 சதவிகித பள்ளிகள் சொந்தக் கட்டடங்களிலேயே இயங்குவது சிறப்பிற்குரிய ஒன்றாகும்.

இராசபாளையம் ஒன்றியத்தில் 37 கிராம வானொலி மன்றங்கள் திறம்படச் செயல்பட்டு உழவர் பெருங்குடிக்குச் சிறப்பான பணியாற்றுகின்றன; சென்ற ஆண்டில் 20 புதிய வானொலிப் பெட்டிகள் இம்மன்றங்களுக்கென வழங்கப்பட்டன.

10 உழவர்கள் சங்கங்களும், 37 சமூகக் கல்வி நிலையங்களும், பல மகளிர் மன்றங்களும் இவ்வொன்றியத்தில் உள்ளன.

சிறந்த ஒன்றியத்திற்குரிய சுழற் கேடயத்தைப் பெற்ற இராசபாளையம் ஒன்றியம், குடும்ப நலத் திட்டத்திற்குரிய 'ஊக்கமிகு ஒன்றியம்' என்ற இன்னொரு கேடயத்தையும் இதே ஆண்டில் பரிசாகப் பெற்றுள்ளது.

345 பேர்களுக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்ததுடன், 2,200 குடும்பங்கள் கருத்தடைக் கருவிகளைப் பெறும் ஆற்றல் -- சேவையின் காரணமாக மேற்கூறிய சுழற் கேடயம் பரிசாக அளிக்கப்பட்டது.

சாலைகளை அமைத்துப் பேணுவதற்கு இராசபாளையம் ஒன்றியம் சிறப்பான கவனம் செலுத்துகிறது; சென்ற ஆண்டில் மட்டும் 22 மைல் நீளப் புதிய சாலைகள் அமைக்கப்பட்டன.

ஊர்களை இணைக்கும் வகையில் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

3,000 மீட்டர் நீளமுள்ள வாய்க்கால் வெட்டப்பட்டுள்ளது.

சென்னைத் துறைமுகத் தொழிலாளர் வாரியம்— மத்திய அரசின் திடீர் நடவடிக்கை

‘ஒருதலைப்பட்சமானது’ எனக் கருத்தறிவிப்பு

மத்திய அதிகாரியின் பரிந்துரை பற்றிக் கி. மனோகரன்

சென்னை, அக். 8—
சென்னைத் துறைமுகத் தொழிலாளர் வாரியம் ('டாக் லேபர் போர்டு') செயல்படுவதை நிறுத்திவைத்து – அதன் பணிகளை மேற்கொள்ள அதிகாரி ஒருவரையும் நியமித்து மத்திய அரசு உத்தர விட்டிருக்கிறது.

" டாக் லேபர் போர்டு, தனது அதிகாரத்தைத் தவருகப் பயன்படுத்தி வந்தது என்று கூறப்பட்ட குற்றச்சாட்டுக்குச் சரியான சமாதானம் கூற, போர்டு தவறிவிட்டதனாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது" என்று அரசு அறிவித்திருக்கிறது.

அடுத்த நான்கு மாதம் வரையில், அரசு நியமித்த அதிகாரியால் போர்டு நிர்வகிக்கப்படும்.

அரசாங்கம், தொழிலாளர்கள், கப்பல் அதிபர்கள் ஆகிய முத்தரப்பினரையும் சேர்ந்த பிரதிநிதிகள் சேர்ந்து போர்டை நிர்வகித்து வருகின்றனர்.

சென்னை டாக் லேபர் போர்டு கலைக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

போர்டின் தவறுகளைச் சுட்டிக் காட்டி கடந்த ஆகஸ்டு திங்களில் மத்திய அரசு விளக்கம் தருமாறு கேட்டிருந்தது.

போர்டு தந்த விளக்கம் திருப்திகரமானதாக இல்லை என்று கூறப்பட்டது.

ஆகவே, மத்திய அரசில் கூட்டுச் செயலாளராக இருக்கும் டி. எஸ். சங்கரன் அளித்த பரிந்துரைக்கேற்ப, அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறதாம்.

மற்றப் பகுதிகளைவிட, சென்னைத் துறைமுகத்தில் டாக் லேபர் போர்டு உயர்ந்த கட்டணத்தை விதித்து வருகிறதாம்.

போதிய வேலையில்லாதிருந்தும் ஏராளமான பேர்களை வேலைக்கு வைத்துக் கொண்டிருப்பதாலும், இவர்களுக்கு வேலை இல்லாமல் இருந்தாலும் குறைந்தபட்ச ஊதியம் வழங்க வேண்டியிருப்பதாலும், இப்படி உயர்ந்த கட்டணம் விதிக்கவேண்டியிருந்தது என்றும் கூறப்படுகிறது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை, துறைமுகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் திரு. கி. மனோகரன் கடுமையாக எதிர்த்தும் அரசு அதைப் பொருட்படுத்தவில்லை.

"மத்திய அதிகாரியின் பரிந்துரை ஒருதலைப்பட்சமானது" என்று திரு. கி. மனோகரன் தெரிவித்தார். துறைமுகத் துணைத் தலைவர்மீது பல புகார்கள் தெரிவிக்கப்பட்டிருந்தும் அது குறித்து, அதிகாரி எதுவும் குறிப்பிடவில்லை என்பதை, திரு. மனோகரன் சுட்டிக்காட்டினார்.

மாவோவுக்கு அடுத்த வாரிசு யார்?

நிலைமையில் மாற்றம்

மாஸ்கோ, அக். 8—
மா சே - துங்குக்கு அடுத்த வாரிசாக இருப்பவர்களில், இப்போது சூ - யென் - லாயே முன்னணியில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சர் லின் - பியோதான் மா சே - துங்கின் அடுத்த வாரிசு ஆவார்—என்றே இதுவரையில் கருதப்பட்டுவந்தது.

சென்னை 34-ல் உள்ள இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறை ஆணையாளர் முன்பாக

மனு எண் : 310/71

மேலாளர்,
ஸ்ரீ சுயம்பிரகாச ஈஸ்வரர் ஆலயம்,
இலுப்பக்குடி,
திருப்பத்தூர் வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம் —மனுதாரர்

இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் இலுப்பக்குடி கிராமம் ஸ்ரீ சுயம்பிரகாச ஈஸ்வரர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமாக, இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் காரைக்குடி உப வட்டம், காரைக்குடி முனிசிபல் எல்லைக்குட்பட்ட சர்வே எண் 1339 (போர்ஷன்)-ல் உள்ள 0.12½ சென்ட் விஸ்தீரணமுள்ள நிலத்தினை ஏக்கர் ஒன்றுக்கு ரூ 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) எனத் தொடக்க விலையாகக் கொண்டு பொது ஏலத்தில் விற்பனை செய்ய அனுமதி வேண்டி 1959-ம் வருடத்திய இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறை சட்டம் (தமிழ்நாடுசட்டம் 22/1959) 34-வது பிரிவின்கீழ் செய்து கொண்ட மனு:—

நோட்டீஸ் மனு எண் 310/71 டி. 1
நாள் 17—9—71

1. மேற்படி மனு குறித்து, சென்னை-34, நுங்கம்பாக்கம்நெடுஞ்சாலையிலுள்ள தமது அலுவலகத்தில் 12—11—71 அன்று பிற்பகல் 2-மணியளவில் விசாரணை நடத்தப்படும்.

2 மேற்படி மனு குறித்துக் கருத்துரைகளோ மறுப்புரைகளோ எவையேனும் இருப்பின், அவற்றினை எழுத்து மூலமாக 10—11—71 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ இவ்வலுவலகத்திற்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்க வேண்டும்.

3. முறையீடுகள் எவையேனும் இருப்பின் அவற்றினை நேரில் விசாரணையின் போதும் தெரிவித்துக் கொள்ளலாம்.

—ஆணையாளர்

செஞ்சீனு சிந்தனையில் புதிய மாறுதல்?

எதிர்கால நிலை என்ன?

தலைமையமைச்சர் இந்திரா கருத்து விளக்கம்

"இந்தியா - இரஷ்யா நட்புறவு ஒப்பந்தத்தை, 'கம்யூனிஸ்டு சீனுவுக்கு எதிரானது அல்ல' என்று இந்திய - இரஷ்யத் தலைவர்கள் கூறியிருப்பதை ஒப்புக்கொள்வதாகச் சீனத் தலைமையமைச்சர் சூ - என் - லாய் கூறியிருப்பது, 'நல்லதோர் அறிகுறி - முன்னேற்றத்தை நோக்கிச் சரியான நடவடிக்கை'" என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

"சூ - யென் - லாய் அறிக்கை, சீனுவின் சிந்தனையில் புதிய மாறுதலைக் காட்டுவதாக இருக்கிறதா? இந்தியா - சீன உறவு சீரமைவதற்கு உதவக் கூடுமா?" என்றெல்லாம் கேட்கப்பட்டபோது, தலைமையமைச்சர், 'எதிகாலம் தான் அதனைக் கூறும்' என்ருர்.

"இந்தியாவுடன் உடன்பாடு காண முடியும் என்று சீனர்கள் இன்னமும் நம்புகின்றனர்" என்று சூ - யென் - லாய் கூறியிருந்தார்.

கிளைக் கழக இடைத் தேர்தல்

"ஈரோடு வட்டம் பிராமணப் பெரிய அக்கிரகாரம் கிளைக் கழகச் செயலாளர் பொறுப்புக்கான இடைத் தேர்தல், ஈரோடு செ. அரங்கராசன் எம்.சி. அவர்களை ஆணையாளராகக் கொண்டு 10—10—71 அன்று திரு. ஆர். கோவிந்தராசன் இல்லத்தில் நடைபெறும்" என்று வட்டச் செயலாளர் சென்னியப்பன் அறிவிக்கிருர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-15) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

இராணுவ நடமாட்டம் தீவிரமாகிறது

சட்லெஜ் நதிக்கு அருகில் பாகிஸ்தான் தீவிரம்

மோகா அக். 8 -
"பெரோஸ்பூர் பகுதியில் சட்லெஜ் நதிப் படுகையை யொட்டி, பாகிஸ்தான் நடமாட்டங்கள் தீவிரமாகி வருகிறது" என்று அங்கிருந்து வந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆபத்துக் காலத்தில் உதவும் நண்பனுக எப்போதும் இருப்பார்களாம்

பாகிஸ்தானுக்குச் செஞ்சீனு உறுதி கூறுகிறது

புதுடில்லி, அக். 8—
"ஆபத்துக் காலத்தில் உதவும் நண்பனுக எப்போதும் இருப்போம்" என்று செஞ்சீனு, பாகிஸ்தானுக்கு மீண்டும் உறுதி அளித்திருக்கிறது.

பாகிஸ்தான் வானொலி, இதனை அறிவித்திருக்கிறது.

"பாகிஸ்தான் விவகாரத்தில், எந்த வெளியார் தலையீட்டையும் செஞ்சீனு எதிர்க்கும்" என்று, கராச்சியில் ஒரு சீனக் கண்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில், சீனத் தூதுவர் உறுதி கூறினராம்.

நெய்வேலி தொழிலாளர் வேலை நிறுத்தம் நீடிக்கிறது

நெய்வேலி, அக். 8—
நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தில் நடைபெறும் இளம் பொறியர்கள் - மற்றும் நடு நிலைத் தொழில் நுணுக்க ஊழியர்களின் வேலை நிறுத்தம் கடந்த ஐந்து நாட்களாகத் தொடர்ந்து நீடித்துக்கொண்டு வருகிறது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

10--10--71

இலுப்பூர்

நகர தி. மு. க. சார்பில் அண்ணு பிறந்த நாள் விழா; மாலை 6-மணிக்கு சீரணி அண்ணு கலையரங்கில்; தலைவர் : என். எஸ். தங்கவேல்; பேசுவோர் : செல்வி எஸ். கஸ்தூரி, வி. சா. இளஞ்செழியன் எம்.எல்.ஏ., க. வீரைய்யா எம்.பி., க. தங்கராசு, என். என். அப்துல் கரீம், எல். எஸ். மாறன், கே. ஆர். சாமி, எஸ். டி. சேவியர், கோ. வே. செல்லையா, இ. நூர் முகம்மது, மற்றும் பலர்.

குழுக் கூட்டங்கள்

சைதை வட்ட தி. மு. க. உறுப்பினர் கூட்டம், 10—10—71 காலை 10 மணிக்கு செங்குன்றம் சனுர்த்தனம் அரிசி ஆலையில் நடைபெறும்; வட்ட உறுப்பினர்கள் தவருது கலந்துகொள்ளுமாறு வட்டச் செயலாளர் பம்மல் நல்லதம்பி கேட்டுக்கொள்கிருர்.

திருச்சி மாவட்ட தொழிலாளர் முன்னேற்றச் சங்கக் கூட்டமைப்பின் கூட்டம், 10—10—71 பிற்பகல் 3-மணிக்கு சங்க அலுவலகத்தில், திரு. எம். எஸ். மணி அவர்கள் தலைமையில் நடைபெறும்.

சேலத்தில் அண்ணு கருத்தரங்கு

சேலம் தமிழ்ச் சங்கச் சார்பில், அறிஞர் அண்ணு கருத்தரங்கம் 10—10—71 மாலை 5 30 மணிக்கு சேலம் தியாசபிகல் சொசைட்டியில் அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமையில் நடைபெறும்; டாக்டர் எம். சுந்தரம், ஔவை நடராசன், சிலம்பொலி செல்லப்பன், ஈரோடு தமிழன்பன், ஆகியோர் கலந்துகொள்வர்; திரு. ஈ ஆர். கிருட்டிணன் வரவேற்புரையாற்றுவார்.

காசநோய் முத்திரை விற்பனை விழா

சென்னை நகர காசநோய் சங்க மத்தியக் குழுவின் சார்பில், 22-வது காசநோய் முத்திரை விற்பனை விழா 9—10—71 மாலை 5-மணிக்கு நேரு விளையாட்டரங்கில் மேயர் சா. கணேசன் தலைமையில் நடைபெறும்; மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் விழாவைத் துவக்கிவைப்பார்.

வடாற்காடு மாவட்ட தி.மு.க. குழுக் கூட்டம்

"வட ஆற்காடு மாவட்ட தி. மு. க. குழுக் கூட்டம், 10—10—71 காலை 10 மணியளவில், இராணிப்பேட்டை பயணிகள் விடுதியில் - திரு. மா. பா. சாரதி தலைமையில் நடைபெறும்; அதுபோது, இரங்கல் தீர்மானம்—மாநாட்டு வரவு-செலவு - கழக வளர்ச்சி - மற்றும் செயலாளரால் கொண்டுவரப்படும் தீர்மானங்கள் ஆய்வுக்கு வரும்; மாவட்ட உறுப்பினர்கள் தவருது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்று, மாவட்டச் செயலாளர் தோப்பூர் திருவேங்கடம் அறிவிக்கிருர்.

தாழ்த்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்

சத்தியவாணிமுத்து

நிகழ்ச்சிகள்

அக். 9 காலை 6 05 மணி : திருச்சிராப்பள்ளி; மாலை 4-மணி : புதுக்கோட்டை; 4-30 மணி : தச்சனுபுரம்—பள்ளிக் கட்டடத்தை திறந்து வைத்தலும் - வானொலி மையத்தை திறந்து வைத்தலும்; 5-30 மணி : பொத்தக்கோட்டை - மின்சார இணைப்பை இயக்கி வைத்தல்; இரவு 7-மணி : கரம்பக்குடி - பொதுக்கூட்டம்.

அக். 10 காலை 10 மணி : திருச்சிராப்பள்ளி - டாக்டர் கலைஞர் கருணுநிதி நகர் பர்மா இலங்கைத் தமிழர் குடியிருப்புக்கு கால்கோள் நாட்டுதல்; மாலை 4 மணி : புதுக்கோட்டை; 5-மணி : பொன்னமராவதி - அரிசன காலனியைத் திறந்துவைத்தல்; 6-மணி : பொல்லிப்பட்டி—மின் இணைப்பை இயக்கி வைத்தல்; இரவு 7-மணி : மாங்காளிப்பட்டி - மின் விசையை இயக்கி வைத்தலும் - சாலையைத் திறந்து வைத்தலும்.

உணவு - வருவாய்த் துறை அமைச்சர்

ப. உ. சண்முகம்

நிகழ்ச்சிகள்

அக். 9 மாலை 4-மணி : வடக்குத்து (கடலூர் வட்டம்); 4 30 மணி : அம்புசெட்டிபாளையம்—சீரணி பள்ளித் திறப்பு; 5-மணி : புலியூர்—குழந்தைகள் காப்பகம் திறப்பு; 6-மணி : தெரு மின் விளக்கு ஏற்று விழா; இரவு 7-மணி : வடலூர்—பொதுக்கூட்டம்.

அக். 10 காலை 7-20 மணி : மதுரை; மாலை 4-மணி : மதுரை—இரயில்வேத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க மதுரை கிளையின் ஆண்டு விழாவும், மாநகரத் தந்தை பாராட்டு விழாவும்.

வேளாண்மை - உணவு அமைச்சர்

அன்பில் தர்மலிங்கம்

நிகழ்ச்சிகள்

அக். 9 காலை 6-மணி : திருச்சி; இரவு 7-மணி : திருவையார் பொதுக்கூட்டம்.

அக். காலை 10 மணி : பாப்பாக்குறிச்சி (திருச்சி) - பர்மா இலங்கைத் தமிழர் குடியிருப்பு - டாக்டர் கலைஞர் கருணுநிதி நகர் கால்கோள் - பெயர்ப் பலகைத் திறப்பு விழா; 11 மணி : தமிழ்நாடு அரசு குற்றேவலர்கள் மாநில சங்க திருச்சி மைய 3-வது மாநில மாநாடு; மாலை 5-மணி : அல்லித்துறை - வேளாண்மை கிடங்கு திறப்பு; 6-மணி : திருச்சி - தந்தை பெரியார் பிறந்த நாள் விழா.

மின்துறை அமைச்சர்

ஓ. பி. இராமன்

நிகழ்ச்சிகள்

அக். 10 காலை 7-15 மணி : கும்பகோணம்; 9-மணி : வடபாதி—மேல்நிலைக் குடிநீர்த் தொட்டித் திறப்பு; 11-மணி : மணக்கரை—பள்ளித் திறப்பு; மாலை 5-30 மணி : கண்டுதன்பேட்டை—மின் விளக்கேற்றுதல்; இரவு 7-மணி : நெடுவாக்கோட்டை—மின் விளக்கேற்றுதல்; 9-மணி : மன்னர்குடி—பொதுக்கூட்டம்.

அமைச்சர் ப. உ. சண்முகம் டில்லி பயணம்

உணவு - வருவாய்த் துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள், 12—10—71 பிற்பகல் விமானம் மூலம் டில்லிக்குப் பயணமாகிருர்.

13—10—71-ல் நடைபெறும் முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு 14—10—71 பிற்பகல் சென்னை திரும்புகிருர்.